தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1978 மார்ச் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பாலத்துறை அருகே அணை.

*வினா 381.—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், பாலத் துறை கிராமம் அருகே ஓடும் ஆற்றின் குறுக்கே நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அணை கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவ் வாண்டு அத் திட்டம் நிறைவேற்றப் படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்விலுள்ளது. ஆய்வு முடிந்து அரசு ஒப்புதல் அளித்த பின் இத் திட்டம் நிறை வேற்றப்படும்.

நல்லூர் ஏரி.

*வினா 382.—திரு. பொ. எ. சீனிவாச ரெட்டியார்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தோகை மலை பிர்க்கா, நல்லூர் ஏரி மராமத்து பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?